**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

CC.No.375/2014 தேதி 11.03.2026

PW1 – திரு. ராமச்சந்திரன், /51, த/பெ. தனக்கொடி

**(எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் குவிமுச பிரிவு 311 ன் கீழ் சாட்சியை திரும்ப அழைக்க மனுதாக்கல் செய்து அது Crmp /2026 தேதி 11.03.2026 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.)**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன் Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து மொத்தம் 4 நபர்கள். அதில் 2 சகோதரிகள். என் பெற்றோர் உயிருடன் இருந்தபோதே எங்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டதென்றால் சரிதான். நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தபோதே நான் ஆசிரியர் ஆகிவிட்டேன் என்றால் இல்லை, தனியாக சென்றபின்தான். என் அப்பா உயிருடன் இருந்தபோதே என் சகோதரிகள் இருவருக்கும் தலா 21/2 மா உயில் எழுதிகொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது, என் அப்பா இறந்த பின் தான் தெரியும். மீத சொத்துக்களை நானும் என் அண்ணனும் வாய்மொழி பாகமாக பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். போலிஸில் கொடுத்த புகாரில் பாகப்பிரிவினை சம்பந்தமாகவும் மற்றும் போர் செட் சம்பந்தமாகவும் பிரச்சனை உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது தொடர்பாக நான் நீதிமன்றத்தில்

வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரத்தினை போலிஸில் சொன்னேனா என்றால் இல்லை, அதன்பிறகு தான் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு நம்பரை குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் ஞாபகம் இல்லை. நானும் எதிரி விவசாய இடத்தை ஒரு பகுதியாகவும், தென்னந்தோப்பை ஒரு பகுதியாகவும் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அதில் இரண்டு போர்செட் உள்ளது. இரண்டு போர்செட்டும் இருவருக்கும் பொதுவானது என்றால் சரிதான். நான் சென்னையில் செட்டில் ஆகி சுமார் 17 வருடம் ஆகின்றது. எனக்கு ஒதுக்கிய இடத்தை என் ஊரை சேர்ந்த மாரிமுத்துதான் பராமறித்து வருகிறார் என்றால் சரியல்ல. போர்செட்டில் ஆளுக்கொரு வாரம் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளவேண்டும் என்றால் சரிதான், ஆனால் அவர் விடவில்லை. மாரிமுத்து நான்சொன்ன வேலைகளை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. நான் சென்னையிலிருந்து மாதம் ஒரு முறை வருவேன் என்றால் சரியல்ல, வாரம் ஒரு முறை. தண்ணீர் தொட்டியின் குளித்தபோதுதான் பிரச்சனை என்றால் சரிதான். அதன் நீள, அகலம் என்னவென்றால் உயரம் சுமார் 3 அடி, அகலம் சுமார் 5 அடி. அது சிமெண்ட் தொட்டிதான். வயலுக்கு நான் மட்டும்தான் சென்றேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 24.05.2014 எதிரி தண்ணீர் பாய்ச்சுகின்ற வாரம் என்றால் சரியல்ல. எதிரி தண்ணீர் பாய்ச்சினபோது அதை நான் தடுத்து எனக்கு பாய்ச்சியதால் அதை அவர் கேட்டபோது எங்களுக்குள் பிரச்சனை ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. என் அண்ணன் என்னை விட தெம்பு இழந்தவர் என்றால் சரியல்ல. என் அண்ணன் என்னிடம் ஏன் தண்ணீய அடைச்ச என்று கேட்டபோது நான் அவரை கெட்டவார்த்தையால் பேசி கீழே கிடந்த அரிவாளை எடுத்து அதன் புடங்கால் அவர் வலதுபக்க கையில் அடித்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் என்

அண்ணன் என்னை வெட்டவில்லையென்றாலும் நான் தண்ணீர் தொட்டியில் குளித்தபோது வழுக்கி விழுந்ததில் எனக்கு பின் தலையில் வெட்டுக்காயம் ஏற்ப்பட்டது என்றும், கையை கீழே ஊனிய போது இடது முழங்கையில் காயம் ஏற்ப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கீழே விழுந்து சத்தம்போட்டபோது வழிப்போக்கறாக சென்ற மாரிமுத்து மற்றும் சங்கர் வந்தார்கள் என்றால் சரியல்ல. தகவல் தெரிந்து என் சித்தப்பா மகன் வீரசேகரன் வந்து என்னை மருத்துவமனை அழைத்துச்சென்றார் என்றால் சரிதான். பட்டுக்கோட்டையில் GH ல் எத்தனை நாள் உள்நோயாளியாக சிகிச்சைப்பெற்றேன் என்றால் அன்றைக்கே தஞ்சாவூர் TMCH ற்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பிவிட்டார்கள். எதிரியிடமிருந்து ஆயுதத்தை போலிஸார் கைப்பற்றினார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் தண்ணீர் தொட்டியில் குளித்தபோது என்னுடன் வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. எதிரி சம்பவஇடத்தில் இல்லையென்றாலும் அவர் என்னை கெட்டவார்த்தையால் பேசவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் முன் விரோதம் காரணமாக அவருக்கு எதிராக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.